# டாக்டர் ராதாகிருஷ்ணன் இணக்கம்?

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
போன் : 389

இதழ் 45

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி 13 ஜுல்ஹஜ் 15 திங்கட்கிழமை [27-3-67]

## தி.மு.க. மனோகரன் தகவல்

சென்னை, மார்ச்.26

டாக்டர் ராதாகிருஷ்ணன் தொடர்ந்து ஜனாதிபதிப்பதவியில் இருக்கச் சம்மதிக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது.

புதுடில்லியில் அவரைச்சந்தித்துப்பேசிய தி.மு.க. தலைவர் திரு. மனோகரன் இன்று இங்கு நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில் டாக்டர் ராதாகிருஷ்ணன் தொடர்ந்து பதவியிலிருப்பதற்கு இணங்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை டாக்டர் ராதாகிருஷ்ணனை திரு.மனோகரன் சந்தித்துப் பேசினார். அவர்தொடர்ந்து ஜனாதிபதி பதவியிலிருப்பதற்கு தி. மு. க. ஆதரவு அளிக்குமென்று மனோகரன் தெரிவித்துக் கொண்டார்.

சுதந்திராச்கட்சித் தலைவர் திரு. ராஜகோபாலாச்சாரியார் டாக்டர் ராதாகிருஷ்ணனை ஆதரிக்கையில் திரு. மசானி திரு. ஜயப்பிரகாஷ்நாராயணுக்காகப்பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது என்று திரு. மனோகரன் கூறினார்.

# உபஉணவு உற்பத்திக்கு வவனியாவில் 2,600 ஏக்கர் காணி

## தமிழில் நிர்வாகம் நடைபெறவில்லை

### யாழ்ப்பாணத்திலேயே இந்தநிலையா என்கிறார் பண்டிதர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள பல அரசாங்க அலுவலகங்களில் தமிழ்மொழியில் நிர்வாகம் நடைபெறவில்லையென்றும் பொதுமக்கள் தமிழில் எழுதும் கடிதங்களுக்கு தமிழில் பதில் கிடைப்பதில்லையென்றும் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் குற்றம்சாட்டுகிறார். இவ்விஷயமாக அடுத்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசுவதற்கு வசதிசெய்யும்படி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவிற்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் தபால் கண்காணிப்பாளர் நிலையம், தேர்தல் கந்தோர், வருமானவரிக் கந்தோர் ஆகியவற்றில் தமிழில் நிர்வாகம் நடைபெறவில்லையென்றும் தருமபுரத்திலுள்ள ஒருவருக்கு தேர்தல் கந்தோரிலிருந்து ஆங்கிலத்தில் தந்தியொன்று கிடைத்திருப்பதாகவும், பொதுமக்களுக்குகூட தமிழில் பதில்கிடைப்பதில்லையென்றும் கிளிநொச்சி எம். பி. மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க அலுவலகங்களில் கருமங்கள் தமிழில் நடைபெறாதது தமிழ் மொழிப் பிரமாணங்களுக்கு மாறானதென்றும், யாழ்ப்பாணத்திலேயே இந்த நிலைமையானால், மற்றும் மாகாணங்களில் கருமங்கள் தமிழில் நடைபெற வேண்டும் என எப்படி எதிர்பார்க்க முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணம், வவனியா மக்களுக்கு வழங்கப்படும்

வவனியா, ஞாயிறு

வவனியாப் பகுதியில் 2,600ஏக்கர் காணி, காணிக்கச்சேரிகள் மூலம் வழங்கப்பட்விருக்கின்றன.

இக்காணிகள் உபஉணவுப் பயிர்ச் செய்கைக்குப்பயன்படுத்தவே வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெங்காயம், மிளகாய் போன்ற உப உணவுப் பொருள்களுக்கு வவனியா பகுதி நிலம் மிக ஏற்றதாக மண் பரிசோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டதாகவும்நெற்பயிர்ச்செய்கையை விட இங்கு உப உணவுப்பயிர்ச் செய்கையால் அதிக பலனை எதிர்பார்க்கக் கூடியதாகவிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு இக்காணிகள் வழங்கப்படவிருக்கின்றன.

## ஆலயப்பிரவேசம் பற்றிய சட்ட நடவடிக்கை

### நாளை ஆராயப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

சிறுபான்மைத் தமிழர் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக, சட்டரீதியில் இறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முடிவுகளை ஆராயும்பொருட்டு நாளை யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் முக்கிய மகாநாடொன்று நடைபெறவிருக்கின்றது. வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராதலைமையில் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டிற்கு யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த சகலகோவில்களினதும் தர்மகர்த்தாக்கள், பரிபாலகர்கள், அர்ச்சகர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த எம். பி.க்கள், செனட்டர்கள், காரியாதிகாரிகள் ஆகியோரும் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

நாளைக்காலை யாழ்ப்பாணம் வரும் யாழ்ப்பாணம் எம். பியான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இம்மகாநாட்டில் கலந்துகொள்வாரெனத் தெரிகிறது. இதுவரை ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக நடைபெற்ற மகாநாடொன்றிலும் இவர் கலந்துகொள்ளவில்லையென்றும் இம்மகாநாட்டில் சிறுபான்மைத் தமிழர் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக தமதுகட்சியின்சார்பில்கருத்துக்களை அவர் தெரிவிப்பாரென்றும் தெரிகின்றது.

ந. நீ.

## அடையாள அட்டைகள் பற்றி தமிழரசு காரியக்கமிட்டி ஆலோசனை

### சட்டநுணுக்கம் குறித்து ஆராயவும் உத்தேசம்

திருகோணமலை, ஞாயிறு

தமிழரசுக்கட்சியின் காரியக்கமிட்டிக் கூட்டம் இன்றும் இங்கு தொடர்ந்து நடைபெற்றது.

இன்று டாக்டர் நாகநாதனும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இலங்கையில் நிரந்தரமாக வாழ்கின்றவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதுபற்றியே நேற்றும் இன்றும் காரியக் கமிட்டி விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிகின்றது.

அடையாள அட்டைகள் வழங்குவதற்கான அரசாங்கத் திட்டத்தை தீவுப்பகுதி எம்.பி.திரு.வி.நவரத்தினம் காரசாரமாகக் கண்டித்து விவாதித்ததாகவும் அவரை ஆதரித்து வேறு பலர்பேசியதாகவும் அறியப்படுகிறது.

அதுபோலவே சாவகச்சேரி எம்.பி.திரு.வி. என். நவரத்தினம்அடையாளஅட்டைகள் திட்டத்தை ஆதரித்துப்பேசியதாகவும்அவரை ஆதரித்தும் பலர் பேசியதாகவும்அறியப்படுகிறது. இந்த நிலைமையில் அடையாள அட்டைகள்திட்டம்சம்பந்தமாககாரியக் கமிட்டிஒருமுடிவும் எடுக்கவில்லை.

இத்திட்டம் சம்பந்தமாக சட்ட நுணுக்கங்களை ஆராய்வதென்றும் காரியக்கமிட்டி அபிப்பிராயப்பட்டதாக அறியப்படுகின்றது.

தமிழரசுக்கட்சியின் ஆதரவில் இயங்கும் இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகத்தின் பொதுத் தேர்தல் இன்று நடைபெற்றது. கழகத்தின் தலைவராக திரு. டேவிட்டும், காரியதரிசியாக திரு. ஈழத்துநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 35 பிரயாணிகள் மாண்டனர்

குஜராத், மார்ச் 26

குஜராத்தின் பார் என்ற ஆற்றில்சென்றுகொண்டிருந்த படகு சரிந்ததால் அதில் பிரயாணம் செய்த 35யாத்திரிகர்கள் நீருள் மூழ்கி மாண்டனர்.

### ரஷ்ய தூதர்களுக்கு தங்கப் பதக்கம்

மாஸ்கோ, மார்ச்26

சினர்கள் மாஸ்கோ தூதரகத்தின் முன்னால் நடத்திய மாஸ்கோ எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது துணிவுடனும் திறமையுடனும், பொறுமையுடனும் பணியாற்றியதற்காக 189 ரஷ்ய தூதரக அதிகாரிகளுக்குத் தங்கப் பதக்கங்கள்வழங்கப்பட்டுள்ளன.

---

கொழும்பு, ஞாயிறு

இன்று ஈஸ்டர் பெருநாள் [illegible] பல்வேறு [illegible] கொண்டாடப்பட்டது.

வங்கி ஊழியர் பிரச்னை

## தொழில் மந்திரி இன்று மகாநாடு கூட்டுகிறார்

கொழும்பு, ஞாயிறு

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள வங்கி ஊழியர் பிரச்னைகளில் சம்பந்தப்பட்டுள்ள எல்லாத் தரப்பினரையும் நாளையதினம் ஒரு மகாநாட்டுக்கு வரும்படி தொழில்மந்திரி அழைத்திருக்கின்றார்.

இந்தமகாநாட்டில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும், நிர்வாகத்தினரின் பிரதிநிதிகளும் அரசாங்க தரப்பு அதிகாரிகளும் கலந்துகொள்வார்கள் என்று தெரிகின்றது.

வங்கிஊழியர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தெரிவித்திருந்த சமரசத்திட்டத்தை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிகின்றது, இப்பொழுது கூட்டுஒப்பந்தம் சம்பந்தமாகவே முடிவுகள் எடுக்கவேண்டியிருப்பதால் நாளை நடைபெறவிருக்கும் கூட்டத்தில் இதுசம்பந்தமாக ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### அகலவத்தை தொகுதி

கொழும்பு, ஞாயிறு

அகலவத்தைத் தொகுதியில் மார்க்ஸீயவாதிகள் அல்லாத எல்லா எதிர்க்கட்சினரும் தேர்தல் சமயத்தில் பகிஷ்கரிப்பு செய்யப்போவதாக அறியப்படுகின்றது. இத்தொகுதியில் இம்மாதம் 29ம்திகதி நியமனப்பத்திரங்சள் தாக்கலாகும். இத்தொகுதியில் சமசமாஜக்கட்சியின்சார்பில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா போட்டியிடவிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இரண்டு வகைப்பட்ட இன்பங்கள் உள்ளன. ஒன்று கீழ்நோக்கியது. மற்றொன்று மேல்நோக்கியது முன்னது ஊன் நோக்குவது பின்னது வான் நோக்குவது. நிலைத்த இன்பத்தைத் தேடி அடைய நாட்டம் கொள்ளுங்கள்.

— வாகீசர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஹூ பங்குனி மீ 13 உ (27-3-67)

## ஆசிரியர்கள் குறைகள்

ஆசிரியர்கள் நிலைபற்றியும் அவர்களின் குறைகள் பற்றியும் குறிப்பிட்டு அவற்றை நீக்குவதற்கான யோசனைகளையும் தெரிவிக்கும் நீண்ட அறிக்கையொன்றை தேசிய ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்கும் நிதி அமைச்சருக்கும் சமர்ப்பித்திருக்கிறது. கல்வி அமைச்சரோ அரசாங்கமோ கல்விச் சீர்திருத்தத்துக்காகக் கொண்டு வரும் எந்தத் திட்டமும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாமல் நிறைவேறமுடியாது. எனவே ஆசிரியர்கள் திருப்தியுடன் வாழ்வதற்கு அவர்களது குறைகளை ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கு கல்வி அமைச்சர் முன்வரவேண்டியது அவசியம்.

தனியார் பாடசாலைகளையும், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்தபின்னர், இலவச ரயில்பிரயாணம் போன்ற சில சிறு சலுகைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டபோதிலும் இதர அரசாங்க ஊழியர்களுக்குள்ள உரிமைகள் ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதும் சமூகத்தில் ஆசிரியர்களுக்கு முன்னிருந்த உரிமைகளும் மதிப்பும் குறைந்துள்ளதென்பதும் உண்மையே. பதவி உயர்வு, பதவியில் உறுதிப்படுத்துதல் போன்ற விஷயங்களிலும் ஆசிரியர்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லையென்பதிலும் ஆசிரியர்களுக்கிடையில் சம்பள விகிதத்தில் தொடர்ந்தும் பாகுபாடு காட்டப்படுகிறதென்பதிலும் நியாயம் இல்லாமலில்லை. இவைகள் போதாதென்று ஆசிரியர்களின் இடமாற்ற விஷயத்தில் அரசியல் வாதிகளின் தலையீடு மற்றொரு தொல்லை. ''எனது 40 வருடகால அரசியல் வாழ்வில் எந்த ஒரு ஆசிரியரையும் எனக்கு எதிராக உள்ளவர் என்ற காரணத்தினால் நான் இடமாற்றம் செய்யவழி கோலவில்லை'' என்று யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறியிருக்கிறார். இது ஆசிரியர் இடமாற்ற விஷயத்தில் அரசியல்வாதிகள் தலையீடு இருக்கிறதென்பதை உறுதிப்படுத்துவதாகும். ஆசிரியர் ஒருவரை ஒரு இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றுவதுமட்டுமல்ல, இடமாற்ற உத்தரவை ரத்துச் செய்ய உதவுவதும் தலையீடுதான். ஆசிரியர்களின் இடமாற்ற விஷயத்தில் அரசியல் வாதிகளின் தலையீட்டுக்கு கல்வி இலாகா இடமளிப்பது ஆசிரியர்களை அரசியல் பகடைக் காய்களாக உபயோகிக்க அனுமதிப்பதாகும்,

ஆசிரியர் நியமனம், பதவி உயர்வு ஆகிய விஷயங்களைக் கவனிப்பதற்கு உள்ளூராட்சி மன்றக் கமிஷன்போன்று கல்விச்சேவைக் கமிஷன் ஒன்றை நியமிக்கவேண்டுமென்ற ஆசிரியர்களின் கோரிக்கை நியாயமானதேயாகும். இதை அமைச்சர்கள் சிலர் முன்னர் வரவேற்றிருந்தும்கூட, இதுவரை செயலாகவில்லை. ஆசிரியர் சம்பளம், வேலை நிலைமைபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு விசேஷ கமிஷன் நியமிக்கப்படவேண்டுமென்றும் ஆசிரியர்கள் கோருகின்றனர். எதெதெற்கெல்லாமோ கமிஷன்கள் நியமிக்கப்படுகையில் ஆசிரியர்களின் குறைகளை ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்காக ஒரு கமிஷன் நியமிப்பதனால் என்ன கெட்டுவிடப் போகிறது?

ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவேண்டும். அவர்கள் ''கடமைக்காக'' வேலைசெய்யக்கூடாது. அவர்கள் தங்கள் கடமையைச் செய்வதற்கு அவர்கள் மனத்திருப்தியுடன் வாழவேண்டும். அதிருப்தியும் முணுமுணுப்பும் உள்ள ஆசிரியர்களால் அறிவும் வலுவுமுள்ள நல்ல சமுதாயத்தைச் சிருஷ்டிக்க முடியாது. எனவே ஆசிரியர்கள் திருப்தியுடன் வாழ்வதற்கு அவர்களது குறைகளை விரைவில் தீர்க்க கல்வி அமைச்சரும் அரசாங்கமும் முன்வரவேண்டும்.

# ஐயாறன் எழுதுவது

தென்னிலங்கையிலும் மலைநாட்டிலும் திக்விஜயம் செய்துவிட்டு, மதுரை திருப்புகழ் தவமணிகோஷ்டியினர் இப்போது யாழ்ப்பாணம் வந்து பாடும் பணி செய்கின்றார்கள். இணுவில் பிள்ளையார்கோவிலில் இவர்களது திருப்புகழ் இன்னிசையையும், தலைவர் தியாகராஜரின் சங்கீத உபந்நியாசத்தையும் கேட்டேன். நேரம்போனதே தெரியவில்லை. திரளாக மக்கள் கூடி பெரிதும் ரஸித்தனர். திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளை பன்முறையும் நினைவூட்டுவதாக இருந்தது, அவரது உயரிய பிரசங்கம். மதுரை மாநகரசபையில் பெரிய பதவி வகிக்கின்றார் அவர். வாரியாரின் குருவான திருப்புகழ்சுவாமிகள், இவரது மாமனாராம். இவரது துணைவியாரும் சேர்ந்து பாடுவதுகுறிப்பிடத்தக்கது.

சில வாரங்களுக்குமுன் யாழ்ப்பாணத்திலே ஒரு பிரபல பாடகரின் கச்சேரியைக் கேட்டேன். சாரீர சம்பத்து அமோகமாக இருந்தது. ஆனால் பக்திக்குக்கடுகளவும் இடமில்லை. இருக்கிற பக்தியும் போய் விடும்போலிருந்தது அந்தச் சூழ்நிலை. ''சங்கீத ஞானமு பக்தி வினு சன்மார்க்கமு கலதே மனஸா'' [பக்தியில்லாத சங்கீதத்தினால் சன்மார்க்கம் கிடைக்க முடியுமா ஏ மனமே சொல்] என்று கேட்கிறார் தியாகராஜசுவாமிகள். ஆனால் திருப்புகழ் தவமணி கோஷ்டியினரின் இன்னிசை செவிகளுக்கு மட்டுமன்றி, பக்தி உணர்ச்சியைப் பெருக்கும் படிமிகப் பயனுள்ளதாக அமைந்தது. தித்திக்கும் திருப்புகழில்தான் உள்ளத்தைக்கவரும் எவ்வளவு விதவிதமான சந்தங்கள்! சிறப்பாக அக் கோஷ்டியைச் சேர்ந்த மூன்று பெண்களின் தேவகானம் கேட்கக்கேட்க இன்னும் கேட்க வேண்டும்போலிருந்தது.

எட்டுப் பேரடங்கிய இக் கோஷ்டியினர் விஸாபெற்று இங்குவரமுடிந்தது முருகன் அருள்தான். நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தாரின் பெருமுயற்சியால் இலங்கைக்கு முதல்முதலாக வந்துள்ள இக்கோஷ்டியினர், ஈழத்து மக்களின் உள்ளங்களைக் கவர்ந்துவிட்டனர். முருகபக்தி அதிகமுள்ள ஈழத்திலே, திருப்புகழ்இசை பரவ இவர்களது விஜயம் உதவவேண்டும். மதுரை மீனாட்சிகோயிலில், இச்சபை நடத்தும் இலவச வகுப்புகளிலே பலர் திருப்புகழ் கற்று பயனடைந்து வருகின்றனராம். இம் மாதக்கடைசிவரை இங்கு இக்கோஷ்டியினர் இருந்து இன்னிசை விருந்தளிப்பதாகத் தெரிகிறது. இந்த 'சான்ஸை' விடாதீர்கள்.

ஃ

சென்னையிலிருந்து பல முக்கிய பத்திரிகைகளின் நிர்வாகிகள் நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தனர். காரணம் தெரியுமா? ரூபாய் மதிப்பு குறைந்தபின் இங்கு இந்தியபத்திரிகைகளின் விலை குறையவேண்டியிருக்க, கூடியிருக்கிறதல்லவா? இங்கு இறக்குமதிலைசென்ஸ் பெற்றவர்களே அதிக விலை வைத்து விற்பதாயும், தங்களுக்குக் குறைவாகவே பணம் கிடைப்பதாயும், இங்கு அரசாங்க அதிகாரிகளிடம் பேசி நிலைமையைச் சீர்செய்யவே வந்துள்ளதாகவுப் தெரிவித்தனர்.

பல தமிழ்நாட்டு சஞ்சிகைகள் ஏன் மிகவும் காலதாமதமாக வருகின்றதென்று விசாரித்தேன்: தூத்துக்குடி மார்க்கமாகவே கொழும்புக்கு, படகில் தபால்மூடைகளை அனுப்புகிறார்களாம். அதனால்தான் தாமதம். ராமேஸ்வரம் வழி திறந்ததும் வாரம் இரண்டுமுறை கப்பல்போய் வந்தும் அதன்மூலம் ஏன் இந்த பார்சல்களை அனுப்பக் கூடாது என்று கேட்டதற்கு, ராமேஸ்வரத்தில் இறங்குதுறை இல்லாததால் தபால்மூடைகளை அங்கு ஏற்றிஇறக்குவது பத்திரமல்லவென்றே தூத்துக்குடி வழியாக இந்தியஅரசாங்கம் அனுப்புகின்றதாம். ரமேஸ்வரம்வழியாக பெண்களும் குழந்தைகளும் உள்ளிட்டு பல மக்கள் பிரயாணம்செய்கையில், தபால் மூடைகளை அனுப்பத்தானா பத்திரம் போதாது? இலங்கை அதிபர்கள் பன்முறை வற்புறுத்தியும், இந்தியா சும்மா இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இதுஉண்மைதானா? புதிய ஹைகமிஷனர் கண்டேவியா காரிய வீரர். இலங்கை மீது அன்புகொண்டவர். [தன் ஒரே புதல்வியை ஓர் இலங்கையருக்குத் திருமணம் செய்து கொடுத்தவர்] அவர் இதில் உடன் கவனம் செலுத்தி தக்க நடவடிக்கையை வெற்றிகரமாக எடுப்பாரென்ற நம்பிக்கையிலேயே இதை எழுதலானேன்.

ஃ

தானெனை முன்படைத்தான் அதறிந்து
தன் பொன்னடிக்கே நானெனப்பாடலந்தோ நாயினே
னைப் பொருட்படுத்து வானெனைவந் தெதிர் கொள்ள மத்த
யானை அருள்புரிந்து ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்
தான் மலை உத்தமனே.

— சுந்தரமூர்த்திசுவாமிகள்

[திருக்கைலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன்தானே என்னை இந் நிலவுலகில் தோற்றுவித்தருளினான். தோற்றுவித்த அத்திருக் குறிப்பினை உணர்ந்து அவனது பொன்போலும் திருவடிகளுக்கு அந்தோ நான் எவ்வளவில் பாடல் செய்தேன்! செய்யாதொழிலவும் அப்புன்மை நோக்கி ஒழியாது என்னை அடியவர்களுள் ஒருவனாக வைத்தெண்ணி வானவர்களும் வந்து எதிர்கொள்ளுமாறு பெரியதோர் யானை ஊர்தியை எனக்களித்து எனது உடலொடு உயிரை உயர்வு பெறச்செய்தான். அவனது திருவருள் இருந்தவாறு என்?]

# “ஆசிரியர்களுக்கென கல்விச் சேவைக் குழு”

## தேசிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

**ஆசிரியர்களின் நிலைபற்றி தேசிய ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்கும் நிதி அமைச்சருக்கும் ஒரு நீண்ட அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ந் திகதி நடந்த சங்கத்தின் ஆண்டுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அடிப்படையாகக்கொண்டு நினைவூட்டல் அறிக்கையாக இது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.**

தனியாரதும், கல்விநிறுவனங்களினதும் முகாமையிலிருந்த பாடசாலைகளை அரசாங்கம் கையேற்று ஆண்டுகள் பலவாகிவிட்ட இன்றும் கூட, இப்பாடசாலைகளிலே கடமையாற்றும் ஆசிரியர்களது அந்தஸ்து, சேவை நிபந்தனைகள் பற்றிய தெளிவான விளக்கம் குறிப்பிட்ட கல்வி மேலிடத்திலிருந்து கிடைத்தபாடில்லை. நேரடியாகக் கூறுவதாயின் அரசாங்கப் பாடசாலைகளிலும் சுயாதீனப்படுத்தப்பட்ட பாடசாலைகளிலும் கடமையாற்றும் ஆசிரியர்கள் ஒரே வகைச் சலுகைகளையும், உரிமைகளையும், சேவை நிபந்தனைகளையும் மற்றைய அரசாங்க அலுவலகளைப்போலவே பெறுதற்கான தகுதி வாய்ந்தவர்களா? அல்லரா?

பகிரங்க சேவைவிதிகள், சுயாதீனப்படுத்தப்பட்ட பாடசாலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எதிராக வியாக்கியானம் செய்யப்பட்டு அவர்கள் அரசாங்க ஊழியர்களுக்கான சலுகைகளைப் பெறுவதினின்றுந் தவிர்த்தற்கே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இவ்விதிகள், அவர்களைத் தண்டிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது மாத்திரம் சற்றும் பிசகாது கையாளப்பட்டு அவர்களை அரசாங்க ஊழியர்கள் என்ற வரிக்குக் கொண்டுவந்து விடுகின்றன. அரிசி எனக்கு உரியது, தவிடு உனக்குச் சொந்தமல்ல' என்ற வகையிலே தான் பகிரங்க சேவை நிபந்தனைகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வியாக்கியானம் செய்யப்படுகின்றன.

### உபகாரச் சம்பளம்

ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்களாயின் அவர்கள் தங்கள் சம்பள தினின்றும் குறிப்பிட்ட தொகையினை [illegible] மலே உபகாரச் சம்பளத் [illegible] வேண்டும். விதவை, அநாதை உபகாரச் சம்பளத்திற்கு மாத்திரம் 4 வீத அடிப்படைச் சம்பள விகிதத் தொகையை அவர்கள் கொடுத்தல்வேண்டும். விரும்பினால் அவர்கள் உபகாரச் சம்பள முழுத் தொகையினை முதற்பணமாகப்பெறவும் வாய்ப்பளிக்கப்படல்வேண்டும். இவ்வாறு அரசாங்க ஊழியர்களினின்றும் எவ்வகையிலும் வேறுபடாத ஓர் உபகாரச் சம்பளத்திட்டத்தை ஆசிரியர்க்கு வகுத்துத்தரல் வேண்டுமென ஆசிரிய சங்கங்கள் பலதடவை வேண்டிக்கொள்ளும் அக்கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு உபகாரச் சம்பளக் கழிவுத் தொகை 4 வீதமாக இருந்தது 2 வீதமாகக் குறைக்கப்பட்ட அளவில் மாத்திரம் இருந்துவருகின்றது. ஆக இன்றுவரை உபகாரச் சம்பளத்திலே ஒருபடித்தரம் ஏற்படாததோடு, உபகாரச் சம்பள முற்பணம் அளித்தற் கோரிக்கையும் ஏற்கப்படாமலே இருந்து வருகிறது.

### சேவை முதிர்ச்சி

சேவை முதிர்ச்சியே உத்தியோக உயர்விற்கான அடிப்படையென்பது எக்காலத்திலும் கையாளப்பட்டுள்ளதாகச் சொல்லமுடியாது. பல சந்தர்ப்பங்களில் ஒரே தராதரமும் ஒரேவகைச் சேவை நற்சான்றுப் பதிவுகளும்இருந்தும்கூடச் சேவைக்கால அளவு குறைந்தோர்க்கும் சேவைமுதிர்ந்தோரைப் புறக்கணித்து உத்தியோக உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேசக் கல்வியதிகாரிகளதோ, பாராளுமன்ற உறுப்பினர்களதோ இச்சைக்கும், இனிமைக்கும் ஏற்பதான பதவி உயர்வுகள் நடைபெறல் வேண்டும்? இன்றுவரை கல்வித்திணைக்களம் எந்த அடிப்படையிலே உத்தியோக உயர்வுகள் வழங்கப்படல் வேண்டுமென்றும் திட்டவட்டமாய் உறுதிப்படுத்தியதில்லை. ஆசிரியசங்கங்கள் இவ்விடயத்தில் விடுத்த கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளன.

### இடமாற்றம்

பெரும்பாலான தொழிற் சங்கங்கள் தத்தம் திணைக்களங்களுக்குரிய இடமாற்ற சபைகளிலே தமது பிரதிநிதிகளை அமர்த்தியிருப்பதோடு இடமாற்றங்களுக்கான நிபந்தனைகளையும் வகுத்துள்ளன. ஆனால் ஆசிரியசங்கங்களைப் பொறுத்தவரையில் இடமாற்ற விடயங்களில் அவற்றிற்கு எவ்வித உரிமைகளும் இல்லாதிருப்பதோடு,

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க ஒத்துழைப்போம்'

## காங்கிரஸ் அல்லாத ராஜ்ய முதன் மந்திரிகள் பிரதமர் இந்திராவுக்கு உறுதி

புதுடில்லி, மார்ச் 26

**நாட்டின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தமது பூரண ஒத்துழைப்பை அளிப்பதென்று காங்கிரஸ் ஆட்சி அல்லாத பல ராஜ்யங்களின் முதல் மந்திரிகள் பிரதமர் இந்திராவுக்கு உறுதி தெரிவித்துள்ளனர்.**

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கும் பல ராஜ்யங்களின் முதல் மந்திரிகளுக்கு தமது வாழ்த்தைத் தெரிவித்து மத்திய அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கடித மூலம் கேட்டிருந்தார்.

பிரதமரின் கடிதத்துக்குப் பதிலாக முதன் மந்திரிகள் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்குத் தயாராக இருப்பதாக எடுத்துக்கூறியுள்ளனர்.

தேசிய பந்தோபஸ்துக்கும், மத்திய அரசாங்கத்துக்கும், ராஜ்யங்களுக்குமிடையிலேயுள்ள உறவு முறை பாதிக்கப்படாதவிதத்திலும் காங்கிரஸல்லாத ஆட்சி பீடங்கள் தம்முடன் சேர்ந்து இயங்கவேண்டும் என்று பிரதமர் தமது கடிதத்தில் கேட்டிருந்தார்.

நாடு எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னையான எல்லை சம்பந்தப்பட்ட விஷயத்தில் தமது பூரண ஒத்துழைப்பு இருக்குமென்று பஞ்சாப் முதல் மந்திரி பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். வகுப்பு ஒற்றுமை ஏற்படவும் தம் மாலானதை செய்வேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள், மற்றும் சகல நல்ல விஷயங்களிலும் தாம் தமது ஆதரவைத் தருவதாக கேரள முதன் மந்திரி திரு. நம்பூதிரிபாத் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இருந்தால், தம்மாலான பூரண ஒத்துழைப்பையும் நல்க முடியும் என்றும் பீஹார் முதன் மந்திரி தெரிவித்துள்ளார். மே. வங்காள முதன் மந்திரியும் இதே போன்று தமது ஒத்துழைப்பை அளிப்பதென்று தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

# காமராஜரை அண்ணா சந்தித்தார்

சென்னை, மார்ச் 26

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ஸி. என். அண்ணாதுரை காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரை சந்தித்துப் பேசினார்.

திரு. அண்ணாதுரை காமராஜர் இல்லத்திலேயே அவரைச் சென்று சந்தித்தார். காமராஜரும், அண்ணாதுரையும் மனம்விட்டுப் பேசியதாகவும், சந்திப்பு பயனுள்ளதாக இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

மரியாதை தெரிவிக்கும் முகமாகவே தாம் திரு. காமராஜரைச் சந்தித்ததாக திரு. அண்ணாதுரை தெரிவித்தார்.

---

# ராஜாஜி பிரவேசித்தது யோக்கியமாகுமா?

## பெரியார் ஈ. வெ. ரா. கேட்கிறார்

சென்னை மார்ச் 26

''எதிர்ப்புஅணியில் முழுப் பலம் பெற்ற கட்சியான தி. மு. க. முழுசுதந்திரமாய் மந்திரிசபை அமைத்துக்கொள்ளலாமென ஒப்பந்தம் பேசிக்கொண்ட பின்பு ராஜாஜி அதில் பிரவேசித்தது யோக்கியமாகுமா?'' என்று பெரியார் ஈ. வே. ராமசாமிநாயகர் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தி. மு. க.வுடன் உறவு [தேன்நிலவு] முறிந்துவிட்டது என்று சுதந்திரா கட்சி தலைவர் ராஜாஜி கூறியது பற்றி பெரியார் ஓர் அறிக்கையில் கூறியிருக்கிறார்.

அவர் அறிக்கை கூறுவதாவது:-

ஆதித்தனார், சபாநாயகர் பதவிக்கு சுதந்திரா கட்சியிலிருக்கும் எந்தயோக்கியரைவிட மட்டமானவர்? படித்தவர், பரிஸ்டர், பணம் சம்பாதிக்கவோ கடுகளவும் அவசியம் இல்லாதவர். அவரைத் தகுதியில்லாதவர் என்று ராஜாஜி எப்படிச் சொல்லமுடியும்!

---

### ஹம்ப்ரியின் ஐரோப்பிய விஜயம்

வாஷிங்டன், மார்ச் 26

அமெரிக்க உபஜனாதிபதி ஹம்ப்ரி ஐரோப்பிய தலைவர்களுடன் பொதுவான பிரச்னைகள்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இன்று இருவாரகால பிரயாணத்தை மேற்கொண்டார்.

அணு ஆயுதத் தடை, வியட்னாமில் அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கை உட்பட பல விஷயங்கள் குறித்து திரு. ஹம்ப்ரி, பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், பிரெஞ்சு ஜனாதிபதி டிகோல் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்.

---

### பாகிஸ்தானுக்கு இலங்கையின் கண்கள்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை சர்வதேச கண் வங்கி பாகிஸ்தானுக்கு இரு ஜோடிக் கண்கள் அன்பளிப்புச் செய்துள்ளது. இலங்கை இதுவரை 12 நாடுகளுக்கு 108 கண்கள் அன்பளிப்புச் செய்துள்ளது.

---

மைசூர்-கேரளா

### முதல்மந்திரிகள் சந்தித்தனர்

மைசூர், மார்ச் 26

மைசூர் முதல்மந்திரி திரு. நிஜலிங்கப்பாவை கேரளம் முதல் மந்திரி திரு. நம்பூதிரிபாத் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தையின் போது இரு ராஜ்ய உணவு மந்திரிகளும் கலந்து கொண்டனர்.

உணவு சம்பந்தமாக நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையின்போது, கேரளத்துக்குமைசூர் உணவு விஷயத்தில் ஓரளவுதான் உதவி செய்யமுடியுமென்றும், மைசூர் நிலைமையில் நல்ல மாற்றமேற்பட்ட பிறகு உதவியை அதிகரித்துக்கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

---

### திருமங்கலம் இடைத்தேர்தல்

#### மனுதாக்கல் ஏப்ரல் 4ல்

புதுடில்லி, மார்ச் 26

திருமங்கலம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் மனுதாக்கல் செய்ய ஏப்ரல் 4-ம் திகதி கடைசிநாள்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதியில் சுதந்திராக்கட்சி வேட்பாளர் முத்துராமதேவர் மரணம் அடைந்ததும், அதனால் அங்கு தேர்தல் நடைபெறவில்லையென்பதும் தெரிந்ததே. அங்கு தேர்தல் நடைபெறுவதற்கான செய்திகளை 'தேர்தல் கமிட்டி' அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இந்தத் தொகுதியில் போட்டியிடத் தன்னை நிறுத்தும்படி ராஜாஜிக்கு காலஞ்சென்ற முத்துராமதேவரின் மனைவி கடிதம் எழுதியுள்ளார். காங்கிரஸ் வேட்பாளராக முன்பு அறிவிக்கப்பட்ட ரத்தினசாமிதேவர் 'இனி நான் போட்டியிடமாட்டேன்' என அறிவித்துவிட்டார்.

---

### 'கைத்தொழில் மூலம் நீக்கலாம்'

#### --உடுப்பிட்டி எம்.பி.

கோண்டாவில், ஞாயிறு

''சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு நீக்க முடியும். அரசாங்க உத்தியோகத்தை, நம்பி வாழ்ந்த இலங்கை மக்கள், குறிப்பாக தமிழ் பேசும்மக்கள் 1956-க்குப் பின் கைத்தொழிலில் ஈடுபட வேண்டும் என்பதை உணர்ந்து விட்டார்கள். இப் பேர்ப்பட்ட தொழிலில் ஈடு பட்டவர்களுக்கு ஆர்வம் [illegible] வேலையில் தொழில் அதிபர்கள் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்'' என்று திருநெல்வேலியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பீடித் தொழிற்சாலையொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் உடுப்பிட்டி எம்.பி. திரு. மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

கொக்குவில் கிராமசபைத் தலைவர் உட்பட மற்றும்பலரும் பேசினர்.

---

ஸியராலியோனில்

# ராணுவத்தினரின் உறுதியான ஆட்சி

பிரீடவுன், மார்ச் 26

ஸியராலியோனில் 'இரத்தம் சிந்தாத அமைதிப் புரட்சி' மூலம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள இராணுவத்தினர் உறுதியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது. வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் கவர்னர் ஜெனரல் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் இப்போது எங்கே இருக்கிறார் என்பது பற்றிய விபரம் தெரிவிக்கப்படவில்லை.

ஸியராலியோனில் பொதுத் தேர்தல் நடைபெற்றதைத் தொடர்ந்து சூழப்பநிலைமை ஏற்பட்டது. முதலாவது திடீர் புரட்சியில் பிரிகேடியர் ஜெனரல் லான்ஸனா ஆட்சியைக் கைப்பற்றினார். இதனைத் தொடர்ந்து சில இராணுவ அதிகாரிகளின் தலைமையில் இந்த இரண்டாவது 'இரத்தம் சிந்தாத அமைதிப் புரட்சி நடந்தது.

நாட்டில் அமைதியும், கட்டுப்பாடும் நிலவுகிறதென்றும், வீதிகளில் இராணுவச் சிப்பாய்கள் சிலரைத்தவிர வேறுஎவரும் காணப்படவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

அரசாங்க செய்திப் பத்திரிகை தவிர்ந்த மற்றப் பத்திரிகைகளெல்லாம்நிறுத்தப்பட்டு விட்டதாவும் தெரிவிக்கப்பட்டது.

---

# 'பாடசாலை வளர்ச்சிபெற்றோர் ஆசிரியரிலேயேதங்கியுள்ளது

## வட்டுக்கோட்டை எம். பி. சொல்கிறார்

சுழிபுரம், ஞாயிறு

''பாடசாலையின் வளர்ச்சி ஆசிரியர்கள், பெற்றோர்களிலேயே அதிகம் தங்கியுள்ளது. அரசாங்கம் தொகுதி வாரியாக ஒதுக்கும் பணத்தைக்கொண்டு எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துவிடமுடியாது. அவசியம் தேவை எனக்காணப்படும் ஒருசிறு கட்டிடங்களை, பொருள்களை பெற்றுக் கொள்ள நாம் முயலலாம். ஆனால் பெற்றோர்கள், ஆசிரியர்கள் முயன்றால் பல தேவைகளை பூர்த்தியாக்குவதுடன் சில சாதனைகளை நிலைநாட்டலாம்'' என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் தெரிவித்தார்.

மூளாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்க வருடாந்த விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார். விழாவுக்கு பாடசாலை அதிபர் திரு. க. ஞா. யோசேப் தலைமைவகித்தார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது :-

''வருங்காலமன்னர்களாக விளங்கப்போகும் குழந்தைகள் தமது இளம் பராயத்தில் கல்வியை பெறுவதோடு மட்டும் நில்லாது ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றையும் கற்றுக்கொள்ளவேண்டும். அப்போது தான் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வாழமுடியும்''

வட்டார வித்தியாதிகாரி திரு. எஸ். சபாபதி உட்பட மற்றும் பலரும் பேசினர். திரு. க. விநாயகமூர்த்தி நன்றி கூறினார்.

---

### மிளகாய்ப் பயிர் நோயால் பாதிப்பு

அளவெட்டி, ஞாயிறு

வடபகுதியில் மிளகாய்ப் பயிர் குருவிச்சை என்னும் நோயால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி விவசாயிகள் கவலை கொண்டுள்ளார்கள்.

---

### தாய் ஏசியதால் நஞ்சு அருந்தினாராம்

#### மகன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், திங்கள்

''உழைப்பது குடும்பத்தை நடாத்தப் போதாது'' எனத் தாய் பேசியதால் மனமுடைந்த மகன் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தியதால் மயக்கமுற்றநிலையில் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று கோண்டாவிலில் நடைபெற்றது.

மயக்கமுற்ற வாலிபரான நன்னி செல்வரத்தினத்தின், [22 வயது] தந்தை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இறந்துவிட்டதாகவும் இவரே உழைத்து அவரது தாயையும் சகோதரியையும் கவனித்துவந்ததாகவும், சம்பவம் நடந்த தினத்தன்று அவரது தாயார் அவரைப் பார்த்து நீ உழைப்பது குடும்பத்தை நடத்தப் போதாது எனப் பேசியதாகவும் இதனால் அவர் மனமுடைந்ததாலேயே நச்சுத்திராவகம் அருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. [ந. நி]

---

### இந்துவாலிபர் சங்கம் வெற்றி

கோண்டாவில், ஞாயிறு

கோண்டாவில் இந்துவாலிபர் சங்கத்தின் 2-வது பிரிவுக் கோஷ்டிக்கும், திருநெல்வேலி இந்து வாலிபர்சங்கத்தின் 2-வது பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் கோண்டாவில் இந்து வாலிப சங்கத்தினர் 25 ஓட்டங்களால் வெற்றியீட்டினர்.

---

### வட்டு சிவன் வென்றது

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுச் சிவன் விளையாட்டுக் கழகத்திற்கும், வட்டுக்கோட்டை 'சன்சயின்' கழகத்திற்கும்இடையே நடைபெற்றகிரிக்கெட்போட்டியில்வட்டுச்சிவன் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. இப் போட்டிக்கு செ. அரியகுணசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மொழியைப் பாதுகாக்க அதன்மீது பற்றுவேண்டும்"

உடுவில், ஞாயிறு

"எமது நாடு சுதந்திரம் அடைந்தபிறகு, சுய பாஷைக் கல்வித்திட்டம் கொண்டுவரப்பட்டது. எல்லாப் பாஷைகளையும், எல்லா மதத்தினரையும், சகல இனத்தினரையும் திருப்திப்படுத்தக்கூடியதாய் அமைந்துள்ளது. சுய பாஷைக் கல்வித்திட்டத்தினுல் சகல இனத்தைச் சேர்ந்த மக்களும் தமது மொழி, கலை, கலாசாரங்கள், பண்பாடு ஆகியவற்றை போற்றியும், பேணிப்பாதுகாத்திட்டு வளர்க்கவும் வழிவகை செய்வதாக அமைந்துள்ளது."

உடுவில் கிராமசபையால் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளியரங்கில் மூன்ரும் நாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற இலக்கிய விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். சபாரத்தினம் இவ்வாறு கூறினுர். உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

திரு. என். சபாரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

மொழியை நாம் பாதுகாக்கவேண்டுமென்ருல் அந்தமொழி மீது பற்றும், நம்பிக்கையும் வைக்கவேண்டும். உண்மையான மொழிப் பற்றும் உறுதியான நம்பிக்கையும் ஒரு மொழிமீது ஏற்படும் பட்சத்தில் அந்த மொழிமட்டுமல்ல, அம்மொழியை பேசுகின்ற, பின்பற்றுகின்ற இனங்களும் கூட வளர்ச்சியடையும், முன்னேறும். மொழியைவளர்க்கமுனையும் அதேவேளையில் எமது நாட்டையும் வளர்க்க முன்வரவேண்டியதவசியம். நாட்டின் பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்த வேண்டும். பொருளாதாரம் வளர்ச்சியுற்ருல் தான் மொழிவளரும்.

வலிகாமம் வடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது: பொருளாதாரம் வேறு, இலக்கியம் வேறு என்று நினைப்பது தவறு. பொருளாதார நிலையின் பிரதிபலிப்புத்தான் இலக்கிய உருவில் கவிஞன் வாயிலிருந்து பாட்டாக வெளிவருகிறது. ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியர், புலவன் பாரதி ஆகியோரது இலக்கியப்படைப்புக்களை உற்றுப் பார்க்கால் அவர்கள் வாழ்ந்த காலத்திருந்த பொருளாதார நிலைபற்றி தெரியவரும்.

"உழுதூண் இனிது" என்னும் விஷயம் பற்றிய கவியரங்கும்நடைபெற்றது. இக்கவியரங்கிற்கு யாழ்ப்பாண இலக்கிய இரசிகர் சங்கத் தலைவர் ஆசிரியர் பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர் தலைமை வகித்தார். கவிஞர் வே. சிவக்கொழுந்து [யாழ்ப்பாணன்], ஆசிரியர் திரு. சி. அரசகுலரத்தினம், ஆசிரியர் திரு. எஸ். சண்முகலிங்கம், கவிஞர் திரு. நா. பஞ்சாட்சரம் ஆகியோர் இக்கவியரங்கில் பங்குபற்றினுர்கள்.

---

## 'பெற்ரேரும் கண்காணிக்க வேண்டும்'

அளவெட்டி, ஞாயிறு

'பிள்ளைகளின் நல்வாழ்வு ஆசிரியர்களின் பொறுப்பு என்று எண்ணி பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டால் மட்டும் போதாது. பெற்ரேர்களின் கண்காணிப்பில்தான் பிள்ளைகளின் வருங்கால நல்வாழ்வு தங்கியுள்ளது' என தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரெத்தினம் மகாஜனக் கல்லூரிப் பெற்ரேர் தினவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசும் போது எடுத்துக் கூறினுர்.

மகாஜனக் கல்லூரித் திறந்தவெளியரங்கில் பெற்ருர்—ஆசிரியர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற இவ்விழாவிற்குத் தலைமைவகித்துத் தொடர்ந்து பேசுகையில், சிறு வயதிலே பிள்ளைகளை நல்ல பழக்கம் உள்ளவர்களாகத் திசுழப் பெற்ரேர்கள் முயற்சி மேற்கொண்டால்தான் பாடசாலையிலும் ஆசிரியர்களின் கட்டுப்பாட்டிற்கு அமைந்து எதிர்காலத்தில் அவர்களை நல்லவர்களாக வாழ வழி ஏற்படும் எனக் குறிப்பிட்டார்.

மாணவர்களின் இசை. நாடக, நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

திரு. வே. தியாகராஜா நன்றி கூறினுர்.

## பையகல கிராமத்தில் மண்சரிவு
### இருவர் மரணம்

பையகல, ஞாயிறு

பையகலவிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் நேற்று ஏற்பட்ட மண்சரிவின் விளைவாக இருவர் மரணமாகினர். பலருக்குக் காயமேற்பட்டது. இந்நிகழ்ச்சியினுல் அக்கிராமத்து மக்கள் பீதியும், கவலையும் அடைந்துள்ளனர்.

மலையொன்றிலிருந்து ஏறத்தாழ 20 கிராமத்தவர் மண்ணைவெட்டி அப்புறப் படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்ததாகவும், அவர்களில் நால்வர் மேலே நின்று வெட்டிக் கொண்டிருந்ததாகவும், மண்ணைக் கொண்டு செல்ல டிராக்டர் ஒன்றின் வருகையை எதிர்பார்த்து மற்றவர்கள் கீழே நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது திடீரென்று மண்சரிவு ஏற்பட்டு, கீழே நின்றவர்களைப் புதைத்ததாகவும் திடீர் மரண விசாரணை அதிகாரியின் விசாரணையின் போது தெரியவந்தது,

இறந்தவர்கள் இருவரில் ஒருவர், ஆறு பிள்ளைகளின் தந்தையாகிய 60 வயது நிரம்பிய ஏ. மரைக்கார் ஆவார். மற்றவர், 21 வயதான எச். மனுவேல் என்பவராவார்.

மண்சரிவினுல் நிலம் பெயர்ந்த தென்னை மரமொன்று, வேலையாட்களின் மீது விழுந்ததால், பலர் காயமுற்றனர். இவர்கள் நாகொடஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்றனர்.

மரணவிசாரணையில், விபத்தினுல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## வயோதிபர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், திங்கள்

மீசாலையைச் சேர்ந்த சின்னையா ஐயம்பிள்ளை என்ற 64 வயது வயோதிபர் பொல்லால் தாக்கப்பட்டு படு காயங்களுடன் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. வி. தருமன் காயங்களுச்குள்ளான ஐயம்பிள்ளையை விசாரணை செய்தார்.

காயங்களுக்குள்ளான ஐயம்பிள்ளையின் சகோதரரான சதாசிவத்தின் மகள் சாமாட்சியை சிவஞானசுந்தரம் என்பவர் கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்ததாகவும் அவருக்கும் அவரது மாமனுரான சதாசிவத்திற்குமிடையிலேற்பட்டகுடும்பச் சச்சரவைத் தொடர்ந்தே ஐயம்பிள்ளை காயமடைந்ததாகவும் விசாரணையின்போது தெரியவந்துள்ளதாம். இது சம்பந்தமாகப் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. [ந. நி]

அனுராதபுர கொலை வழக்கு

# பொலீஸ்உத்தியோகத்தர்க்கு பலவகை அன்பளிப்புகள்
## விபரங்களடங்கிய புத்தகம் கைப்பற்றப்பட்டது

அனுராதபுரம், ஞாயிறு

அனுராதபுரக் காட்டில் நடைபெற்ற மர்மக்கொலைகள் பற்றிப் புதிய புதிய தகவல்கள், அனுராதபுர பொலிசாருக்குக் கிடைத்து வருகின்றன.

கடந்த இரண்டு வருடங்களில் நீரில் மூழ்கியோ அல்லது நச்சுத்திராவகம் அருந்தியோ புனித நகரான அனுராதபுரத்தில் இறந்ததாகக் கருதப்படும் ஜனவரின் மரணமும், தற்போது அனுராபுரப் பொலிசார் துப்புத்துலக்கி வரும் களத்தாவை காட்டுக்கொலை வழக்குடன் சம்பந்தமுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை, களத்தாவை கொலை வழக்கின் முதலாவது சந்தேக நபரான சாராயத்தவறணைச் சொந்தக்காரர் அல்பிரெட்டி சொய்ஸாவின் தவறணை மனேஜரிடமிருந்து பொலிசார் பச்சைநிற அட்டையுள்ள குறிப்புப் புத்தகமொன்றைக்கைப்பற்றினர். இப்புத்தகத்தில், சொய்ஸா சாராயத்தவறணையை எடுத்த நாட் தொடக்கம் பொலிஸ், கலால், பாதுகாப்புச்சபை உத்தியோகத்தர்களுக்கு அளிக்கப்பட்ட பணம், வெகுமதிகள்பற்றிய சகல விபரங்களும் அடங்கியுள்ளதாக அறியக்கிடக்கிறது.

இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள குறிப்புகளின்படி, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நத்தார், புதுவருட அன்பளிப்புகள் என்றமுறையில் பணம், சாராயம் முதலியன கிரமமாகக் கொடுக்கப்பட்டு வந்துள்ளதாகத் தெரிகிறது.

இவ்விதம் அன்பளிப்புப் பெற்றவர்களின் பெயர்களில் அனுராதபுரம் பொலிசைச் சார்ந்த மிக உயர்ந்த பதவி உத்தியோகத்தரும், மிகத்தாழ்ந்த பதவி உத்தியோகத்தரும் அடங்கியுள்ளனர். இந்த அன்பளிப்புக்குவிதிவிலக்காக விளங்குபவர்கள் பொலிஸ் சுப்பிரின்டென் திரு. தனபாலாவும், தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. டி. சில்வாவுமேயாவர்.

அடுத்த வாரத்திற்குள் களவத்தை கொலைவழக்கில் பல மர்மங்கள் துலக்கப்படலாமென அனுராதபுரம் பொலிஸார் நம்புகின்றனர். விசாரணைகள் வடபிரிவு உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலெரிக் அபேகுணவர்த்தனவின் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

டிராக்டர் சாரதி பி. கே. டி. பெரேராவின் சடலத்தை களு அல்பேர்ட் என்ற ஐ. ஆர். ஸி. எவ்விதம் எரித்தான் என்று நேற்று களவத்தையில் அனுராதபுரம் மாஜிஸ்திரேட் திரு. கே. ஏ. பீ. ரணசிங்கா முன்னிலையில் சாட்சி ஒருவர் விவரித்தார்.


## டைம் கிறீம்

உலகப் பிரசித்திபெற்றது. இரம்மியமானது. இது, இல்லறவாழ்க்கையில் பூரண திருப்தி அளிப்பது. புகழ் வாய்ந்த மேல்நாட்டு மருத்துவ நிபுணர்களால் உயர்தர ரசாயன மருத்துவசாலையில் தயாரிக்கப்பட்டது. முழு விபரங்களுக்கும் எமக்கு எழுதுங்கள். V. P. P. மூலம் அனுப்பப்படும்.

விலை ரூ. 5/-

தபால் செலவு சதம்-/25

மெட்ரோ ஏஜென்ஸி

235 1/1, நொறிஸ்ரூேட், கொழும்பு -11.



கலங்கள் வேறு....

உள்ளடக்கம் ஒன்றே.




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் சூப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் சூப்பர் குயிங் கிடைக்கும் தானே. எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும் போதே பேனாவைத் துப்புரவு செய்வதுமாகிய 'சால்வ் - எக்ஸ்' என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் சூப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




எல்லாப் பேனுக்களுக்கும் சிறந்த மை இதுவே.

மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிட்டெட், பங்கஸால் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

வலி. வடக்கு பலநோக்க கூ. ச. சமாஜத்தின் தெல்லிப்பளைக் கிளை நிலையத்தில், 3000க்குமேற்பட்ட சாக்கு, சீனி, சில்லறைப் பொருட்கள், லொறி ரயர், ரியூப், தகரங்கள், விறகு முதலியன வருகிற செவ்வாய்க்கிழமை 28-3-67 காலை 11 மணியளவில் விற்கப்படும். 1704

### கார் சாரதி பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

காலஞ்சென்ற கணபதீஸ்வரக்குருக்களை காரால் மோதி மரணம் விளைவித்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கார்ச் சாரதியான களனியாவைச் சேர்ந்த சிரிசேன என்பவர் 1000ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டார். ஊர்காவற்றுறை பொலிசால்இவர் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பதில் மாஜிஸ்டிரேட் திரு. வின்ஸ்டன் பீரிஸ் முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது இவரை பிணையில் விடுதலை செய்த மாஜிஸ்டிரேட் மீண்டும் வைகாசி மாதம் 5ம்திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். எதிரி சார்பில் புரக்டர், ஏ. அன்ரனி ஆஜராகியிருந்தார். [ந. நி]

### இலவச கண் சிகிச்சை

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சிப் பகுதிக் கண் நோயாளர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியொன்று கிடைத்துள்ளது வருகிற மாதம்5-ம் திகதி வடமராட்சிக் காரியாதிகாரி அலுவலகத்தில் கண் நோயாளருக்கு இலவச வைத்திய சிகிச்சைகள் அளிப்பதற்கு வடமராட்சிகாரியாதிகாரி திரு. ஏ .ஸி. விசுவநாதன் ஒழுங்கு செய்துள்ளார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டைகள்!

வெள்ளை முட்டை -/18 சதம். சிகப்பு முட்டை -/20 சதம். வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1632

சேவல் குஞ்சுகள்:

1நாள், 1கிழமை, 1மாதப் 2மாதக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு, விலை நிதானம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1589

கார்

சிறந்த நிலையிலுள்ள சொந்தப் பாவிப்பிலிருக்கும் A 55 ஆஸ்டின் கேம்பிரிஜ், பரிஞ மொடல் டுடோன் 2 ஸ்ரீ 6223 நம்பர் கார் உடனடி விற்பனைக்குண்டு. தரகர் இன்றி நேரடியாகப் பார்வையிடவும். எஸ். துரைசிங்கம், 'அண்ணு மாளிகை' மெயின் வீதி, காங்கேசன்துறை. 1660

### வாடகைக்கு

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் நவீன வசதிகளுடன் புதிய வீடு வாடகைக்கு உண்டு தொடர்புகொள்க: இல 171, கோவில்வீதி, நல்லூர் 2363

## களனி ஆற்றில் இளம் பெண் சடலம்

### வாலிபனும் குதித்தான்

களனி, ஞாயிறு

இனந்தெரியாத 25 வயது இளம் பெண்ணின் சடலமொன்று, களனி புதிய பாலத்துக்கருகே கடந்த வெள்ளிக்கிழமை மாலை பெலியகொடைப் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டது.

ஆற்றிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்ட சடலம் அழுதந்தறுவாயில் இருக்கக்காணப்பட்டது. வாயில் இரத்தக்கறைகள் இருந்தன.

இறந்தபெண், மஞ்சள் நிறச்சேலையும் சிவப்பு ஜாக்கெட்டும் உடுத்திருந்தார். சடலம் தற்போது பொரளைப் பொலிஸ்பிரேத அறையில் கிடக்கிறது.

களனிவிகாரைக்கு அற்காமையிலிருந்து களனி ஆறுறினுள் 22-ம் திகதி மாலை பாய்ந்த இளம்பெண்ணின் சடலமாகவே இருக்கலாம் எனப் பொலிசார் நம்புகின்றனர்.

இதற்கிடையில், நேற்று முனதினம் மாலை ஒரு 18 வயது வாலிபன் விக்டோரியாப் பாலத்திலிருந்து களனி ஆற்றினுள் பாய்ந்ததாக

[6-ம்பக்கம்பார்க்க]


# ராணி

## அழகிகளைத் தெரிவு செய்து அழகிய பரிசொன்றைப் பெறுங்கள்.

### 1 ஆம் பரிசு

சிங்கர் தையல் மெசின் (கபினெற் மொடல்) அல்லது ரூ. 1000/- ரொக்கம்.



### 2 ஆம் பரிசு

ஒரு குருண்டிக் பாட்டரி ரேடியோ அல்லது ரூ. 525/- ரொக்கம்.



### 3 ஆம் பரிசு

ஒரு ஹம்பர் பைசிக்கிள் அல்லது ரூ. 300/- ரொக்கம்.



### 4 ஆம் பரிசு

டயமன் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் சமையல் பாத்திரங்கள் கொண்ட பொட்டலம் அல்லது ரூ. 185/- ரொக்கம்.



முதலாவது பரிசு முதலாவதாகக் கிடைக்கப்பெறும் துப்புரவான, சரியான விடைக்கு வழங்கப்படும். இவ்வாறே 2ஆம், 3ஆம், 4ஆம் பரிசுகள் இரண்டாவதாகவும், மூன்ருவதாகவும், நான் காவதாகவும் கிடைக்கப்பெறும் துப்புரவான, சரியான விடைகளுக்கு வழங்கப்படும்.



மேலேயுள்ள படத்தில் இலங்கையின் பண்டைய அரசிகளில் ஒருவரான பத்மாவதி குளித்துக் கொண்டிருக்கிருர். அவரைச் சூழ அவருடைய சேடிமாரும் மற்றும் பல அழகிகளும் காணப்படுகின்றனர். இவர்களுடைய முகங்கள் மறைந்திருக்கின்றன்.

நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய காரியம் மிகவும் இலகுவானது. படத்தில் எத்தனை முகங்கள் உண்டு என்பதை எண்ணிப் பார்த்து, உங்கள் பதிலைக் கீழேயுள்ள பத்திரத்தில் எழுதி அந்தப் பத்திரத்தை ராணி சந்தன சோப் உறையொன்றுடன் த. பெ. 1119, கொழும்பு என்னும் விலாசத்துக்கு அனுப்ப வேண்டியதே.

மேலேயுள்ள படத்தில்....... ராணி

அழகிய முகங்கள் காணப்படுகின்றன.

பெயர்: ..............................

வயது ..............................

விலாசம் ..............................

ஒப்பம்: ..............................

**விதிகள்**

1. இந்தப் போட்டியில் சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட் மலர் அன்ட் பிப்ஸ் (இலங்கை) லிமிட்டெட், கிராண்ட் அட்வேர்ட்டைஸிங் (இலங்கை) லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றத் தகுதியற்றவர்களாவர்.
2. இந்தப் போட்டி சம்மந்தமாக எத்தகைய கடிதப் போக்குவரத்தும் நடைபெறமாட்டாது.
3. நீதிபதிகளின் தீர்ப்பே இறுதி முடிவாக இருக்கும்.

## சோப்புகளில் ராணி ராணி சந்தன சோப்

சுவதேசி இண்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட், கந்தானை.

GRANT-37


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களுக்கென . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
அவற்றிற்கென இடமாற்ற நிபந்தனைகள்கூட வகுக்கப்படாமலே இருந்துவருகின்றன. இடமாற்றச் சபைகளிலே ஆசிரியர்களின் பிரதிநிதிகள் மிகக்குறைந்த வலுவோடு செயற்பட்டமையுங்கூடக் கடந்த காலத்திலே நிறுத்தப்பட்டுவிட்டது. இடமாற்றங்களிலே பாராளுமன்ற உறுப்பினர் மூலநாயகர்களாய் விளங்குவதால் அவர்களின் கையிலே ஆசிரியர் பகடைக் காய்களாய் உருட்டப்பட்டு வருதலும் தவிர்க்கக்கூடாததாகிவிடுகிறது. இத்தகைய சிலரார்திக்கம் அல்லது அரசியல் அடக்குமுறையால் ஆசிரியர்களின் சுதந்திரமும், ஆசிரியத் தொழிலின் திறமையும் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, மிகக்கீழாக மதிக்கப்படும் நிலைமையும் அடைகின்கிறன. பதில் நியமனங்கள் பற்றி பகிரங்கச் சேவை விதிகளையும், நிதிவிதிகளையும் அரசாங்க பதில் நியமனங்களுக்கான காலவரையறையையும் வேதனத்தையும் வகுத்துத்தந்துள்ளன. வியப்பிற்குரிய விடயம் என்னவென்றால் இந்த நிபந்தனைகள் ஆசிரியர் சம்பந்தப்பட்ட வரையில் பிரயோகிக்கப்படுவதில்லை. பெருந்தொகையான ஆசிரியர்கள் நீண்ட காலம்வரை பதில் அதிபர்களாகவே கடமையாற்றிவருகின்றனர் இவர்களுட்சிலர் எட்டு வருடங்களுக்கு மேலாகவே இப்பதில் நியமனங்களில் இயங்கி வருகின்றனர். பதில் நியமன நிபந்தனைகளை இவர்களுக்கும் கையாள்வதில் என்ன தடையியிருக்கின்றது.

### சாதி, இன சமய அடிப்படையில் வேறுபாடு

பகிரங்கசேவை விதிகள் மத, இன, சாதியடிப்படையில் நியமனங்களோ, உத்தியோக உயர்வுகளோ வழங்கப்படல் வேண்டுமென்று வேறுபாடுகளை வகுத்ததில்லை. ஆனால் சுயாதீனப்படுத்தப்பட்ட பாடசாலைகளில் இன்றும் மத அடிப்படை நியமனங்களும் உத்தியோக உயர்வுகளும் வழங்கப்படுவதாகிய பழைய முறையே செயல்பட்டுவருகிறது. உத்தியோக உயர்வுக்கு ஆசிரியரின் தராதரமும், திறமையும், சேவை முதிர்ச்சியுமே அளவுகோலாய் அமைதல்வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட ஒரு சமயப் பிள்ளைகளின் கூடிய சராசரியோ, இனமோ, சாதியோ அளவுகோலாதல் கூடாது.

[தொடரும்]

## தீ மிதிப்பு

கோண்டாவில், ஞாயிறு
நேற்றைய தினம் கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற தீர்த்த உற்சவத்துடன், தீமிதிப்பும் நடைபெற்றது. இத் தீமிதிப்பில் பலபக்தர்கள் கலந்து கொண்டார்கள்.

## களனி ஆற்றில்....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]
அறியக்கிடக்கிறது.

பாலத்தின் ஒரு பகுதியிலிருந்து, ஒரு சோடி செருப்பும், பச்சைக் கைக்குட்டையில் கயிற்றினால் முடியப்பட்ட பர்சும் தொங்கக் காணப்பட்டன.

பர்சில் இரு புகைப்படங்கள் இருந்தன. ஒரு படத்தின் பின்புறத்தில் கே. பியதாச 29, பட்டாவெல ரேட்வெலிசம என்றுஎழுதப்பட்டிருந்தது

பொலிசார் மேலும் புலன் விசாரணை நடத்திவருகின்றனர்.

# யாழ். ஆஸ்பத்திரி 'எக்ஸ்-றே' நிலையம் பற்றி புகார்

யாழ்ப்பாணம், திங்கள்
இலங்கையிலேயே மூன்றுவது பெரிய 'எக்ஸ்றே' படப்பிடிப்பு நிலையம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலே இருக்கின்ற போதிலும் இங்கு நிலவும் பல வசதியின்மைகள் குறித்து புகார் செய்யப்பட்டுள்ளது.

தினமும் இங்கு சுமார் 100க்கும்மேற்பட்ட நோயாளர்களுக்கு 'எக்ஸ்றே' படங்கள் எடுக்க வேண்டியுள்ள நிலையிலிருக்கும் போதிலும், இங்கு இயங்கும் இரண்டு 'எக்ஸ்றே' படப்பிடிப்பு இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்து விட்டதாம். இதுசம்பந்தமாகப் பல தடவைகள் மேலிடத்துக்கு அறிவித்தும் அவர்கள் இது விஷயமாக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாததால் ஒரு இயந்திரத்தின் உதவி கொண்டே அதிகமான 'எக்ஸ்றே' படங்களை எடுக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 'எக்ஸ்றே' படப்பிடிப்பு நிலையத்திற்குள் ஒரு மலசலகூடம் இல்லாதது பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'பேரிய ம்எனிமா' 'எக்ஸ்றே' படங்கள் எடுக்கப்பட்டதும், நோயாளிகள் மலம்கழிக்க வசதி இல்லை. இப்படப்பிடிப்பு நிலையத்திற்குள் ஒரு மலசலகூடமில்லாததால் நோயாளர்கள் அவர்களது வார்டுகளுக்கே மலம் கழிப்பதற்காகதிருப்பி எடுத்துச் செல்லப்படுவதாகவும் இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது மேலும் இங்குஅட்டன்டர்கள் உதவியாளர்கள்பற்றாக்குறையினால் இங்கு எடுக்கப்பட்ட படங்களை வார்டுகளுக்கு விநியோகம் செய்வதில் தாமதம் ஏற்படுவதுபற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ந.நி.]

## இரத்தினபுரியில் புதிய காரியாலயம்

இரத்தினபுரி, ஞாயிறு
இரத்தினபுரியில் புதிய மத்திய காரியாலயம் ஒன்றை அரசாங்கம் நிறுவ இருக்கிறது. கச்சேரி, தபாற்கந்தோர், தொலைபேசித் தொடர்பு நிலையம், சப்ரகமுவமாகாணபகுதித்தபாற்கந்தோர் மற்றும் இரத்தினபுரியிலுள்ள அரசாங்க இலாகாக்கள் யாவும் இப்புதிய காரியாலயத்தில் இடம் பெறும்.

## "தி.மு.க.வை ஆதரிக்கிறோம்"

### பூபேஷ் குப்தா அறிவிப்பு

சென்னை, மார்ச் 26
''தமிழ் நாட்டில் தி.மு.கழகஆட்சியை ஆதரிக்கிறோம்'' என்று வலதுசாரி கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் பூபேஷ் குப்தா அறிவித்தார்.

சென்னை சூளையில் வலதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டம்நடந்தது.

இந்தக் கூட்டத்தில் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இந்தியாவின் பல பகுதிகளில் எதிர்க்கட்சி மந்திரி சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணமான இந்திய மக்களைப் பாராட்ட வேண்டும்.

## இளவரசர் நிஸாமாகிறார்

ஹைதராபாத், மார்ச் 26
கைதரபாத் இளவரசர் முகம்ஸலி அடுத்தமாதம் 6ம் திகதி நிஸாமாகிறார், அன்றையதினம் அவர் நிஸாமாக பதவி ஏற்பார்.

## கே.எம்.பி. ராஜினமா

கொழும்பு, ஞாயிறு
இலங்கைமீன்பிடி இலாகா டைரக்டர் பதவியிலிருந்து தமது ராஜினமாவைச் சமர்ப்பித்துவிட்டதாக திரு. கே. எம். பி. ராஜரத்தின அறிவித்துள்ளார். மார்ச்21ம் திகதியன்றே தாம் ராஜினமாச் செய்துவிட்டதாக அவர் தெரிவித்தார். தாம் தமது பதவியிலிருந்து நீக்கப்படவில்லையெனவும், வேறு எந்தப் பதவியும் தமக்கு உறுதியளிக்கப்படவில்லையெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தவில் வித்துவான்கள் மலாயா சென்றார்கள்

அளவெட்டி, ஞாயிறு
சென்னை இசைவிழாவில் கலந்து கொண்ட ஈழத்து பிரபல தவில் வித்துவான்கள் மலாயாவில் நடைபெறவிருக்கும் பல கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளச்சென்றுள்ளார்கள்.

அளவெட்டி திரு. வி தெட்சணாமூர்த்தியும் இணுவில் திரு. என். ஆர். சின்னராஜாவுமே மலாயாவுக்குச்சென்றுள்ளனர்.

## உலக நாடக தினம்

கொழும்பு, ஞாயிறு
நாளை உலகநாடக தினத்தை முன்னிட்டு கல்வி கலாசார அமைச்சு பல நாடகங்களை நடத்த ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது. மாவட்ட கலாமன்றங்களின் உதவியுடன் எல்லா மாவட்டங்களிலும் நாடகங்களை மேடையேற்ற அரசாங்க அதிபர்கள் ஏற்பாடுகள் செய்துள்ளார்கள்.

## கை கலப்பில் 10 பேர் காயம்

கொழும்பு, ஞாயிறு
தெகிவளை வில்லியம்ஸ் பிஸ்கட் தொழிற்சாலையைச் சேர்ந்த வேலைநிறுத்தக்காரரும், வேலை நிறுத்தம் செய்யாதவரும்ஈடுபட்டகைகலப்பில்10பேர்காயமடைந்தனர் கடந்த வெள்ளியன்று இச்சம்பவம் நடைபெற்றது. பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.


கிங்ஸ்லி 3-வது வாரம்
[கொழும்பு]
வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி மாலை 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயாதினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-30 மணிக்கு

வியப்பு திகைப்பு,
விறு விறுப்பு
அனைவரையும் மகிழ்விக்கும்
அற்புதப் படைப்பு
தாய்ப்பாசம், அன்பு
அனைத்துக்கும் ஓர்
எடுத்துக்காட்டு.



எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா, கீதாஞ்சலி, பண்டரிபாய்
நடிக்கும்
அன்னை பிலிம்ஸ்
தாயின் மடியில்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மற்றும் பல திரைகளில்
இருவல்லவர்கள்

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45 P.M.
TONY RANDALL
in
MARRAKESH
Also showing Cricket
Test Match England
vs
West Indies and
Indiana polis
Motor Racing

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
விஜயா—முத்துராமன்
நடித்த
பஞ்சவர்ணக் கிளி

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ROCKET GIRL
(serial)

REGAL - JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
Horst Buchaholz
Jose Ferrer
in
NINE HOURS TO RAMA


## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் ப்ராபவ வருடம் பங்குனி மாதம் 16-ம் திகதி [30-3-67] வியாழக்கிழமை இரவு 9-20 மணி முதல் 10-20 மணிவரை உள்ள விருச்சிக லக்கின சுபமுகூர்த்தத்தில்,

எங்கள் புதல்வி திருநிறைசெல்வி
**தேவகல்யாணி**
அவர்களுக்கும்

க. நல்லதம்பி தம்பதிகளின் புதல்வன்
[தலைமையாசிரியரும், உதவியாசிரியையும் இலகடி தமிழ்ப்பாடசாலை, காரைநகர்]
திருநிறைசெல்வன்
**சபாநாதன்** [சௌக்கிய பரிசோதகர்]
அவர்களுக்கும்

திருமணவிழா திருவருள் நலத்தினால் மணமகள் இல்லத்தில் இனிது நடைபெறும். அத்தருணம் தாங்களும், தங்கள் சுற்றம் சூழச் சமுகந்தந்து, மணமக்களை ஆசிர்வதித்துச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
சி. இ. செல்லத்துரை தம்பதிகள்

''தேவபவனம்''
காரைநகர்.

அதிபர்:- S. R. S. ஜவுளி மாளிகை, S. R. S. நெசவுநிலையம்
212, 216, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible]கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டுமார்ச்மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org